என்னடா தம்பி
என்னடா தம்பி கதைக்கிறானுகள் சந்திவெளியில
எப்பியாண்டாம் நேற்றைய அடி கதிரவெளியில
வாகரை போடியார் சொல்லுறாரு அடியெண்டா அடியாம்
வழிசலுகள் வந்த பீரங்கி பொடியாம் பொடியாம்
என்னடா தம்பி கதைக்கிறானுங்க சந்திவெளியில
எப்பியாண்டாம் நேற்றையான் அடி கதிரவெளியில

கொடிய சிங்களப் படைகள் ஊரச் சுத்துறானுகள்
கொட்டியா கொட்டியா எண்டு கனவில் கத்துறானுகள் *2*
விடுதலைப் புலிய அழிச்சதாகத் துள்ளுறானுகள்
வெறுவாய்க்கு கெட்ட பொய் சொல்லுறானுங்க *2*

என்னடா தம்பி கதைக்கிறானுங்க

காலங்காலமாக நம்மள அழிச்சவயெலவா
கழிசற நம்மட பெண்டுக உடம்பக் கிழிச்சவயெலவா *2*
நாலஞ்சு கோவில பள்ளிய கூட இடிச்சவயெலவா
நம்மட பொடிய இவண்ட கதைய முடிச்சவயெலவா *2*

என்னடா தம்பி கதைக்கிறானுங்க

முக்காவாசிப்பேர் சிங்களப் படைய விட்டிட்டுப் போயிட்டான்
முஸ்தபா சொல்லுறான் சிங்களப் படைக்கு புலிதானாம் சைதான் *2*
அக்கா நேற்றுத்தான் கதிரவெளிப் பக்கம் போயிருக்கு
அவாவரட்டுண்டா தம்பி மறுகா இன்னும் கதையிருக்கு *2*

என்னடா தம்பி
என்னடா தம்பி கதைக்கிறானுகள் சந்திவெளியில
எப்பியாண்டாம் நேற்றைய அடி கதிரவெளியில
வாகரை போடியார் சொல்லுறாரு அடியெண்டா அடியாம்
வழிசலுகள் வந்த பீரங்கி பொடியாம் பொடியாம்
என்னடா தம்பி கதைக்கிறானுங்க சந்திவெளியில
எப்பியாண்டாம் நேற்றையான் அடி கதிரவெளியில